**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**C.C. 356 /2022**

**Prosecution Witness : 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. வேலுச்சாமி** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. கோபால்சாமி நாயக்கர்** | **Calling** | : | |
| **Village** | : | **செம்பட்டி** | **Religion** | : | **இந்து** |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **62** |
| | | | **Dated** | : | **04.11.2024** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**பட்டியல் சாட்சி 4 திரு. வேலுச்சாமி ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அ.சா. 4 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து ஹோட்டல் கடை வைத்து நடத்தி வருகிறேன். 11.11.2013 ம் வருடம் முருகன் என்பவர் மதியம் 02.00 க்கு என் ஓட்டலுக்கு சாப்பிட வந்தார். அவருக்கு பின்னாலேயே நாகராஜ், பால் பாண்டி, இன்னொருவர் ஆகிய மூவரும் வந்தனர். அவர்களுக்குள் பணம் கொடுக்கல் வாங்கல் பற்றி பேசிக் கொண்டு இருந்தார்கள். அது வாய் தகராறாக மாறி விட்டது. அதனால் கடையில் இருந்த நானும், என் கடையில் வேலை பார்ப்பவர்களும் அவர்களை விலக்கி விட்டுவெளிளே அனுப்பி விட்டோம். அவ்வளவு தான் எனக்கு தெரியும். அதற்கு பிறகு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>எதிரி  தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

**நான் முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன். நாகராஜ், பால்பாண்டி மற்றும் இன்னொருவரும் அன்றைய தினம் என் ஓட்டலுக்கு சொன்ன தேதியில், சாப்பிடவும் வரவில்லை, அவர்களுக்குள் வாய் தகராறும் ஏற்படவில்லை, அந்த சண்டையை நான் விலக்கி விடவும் இல்லை, நான் வெளியே அனுப்பவும் இல்லை என்றால் சரியல்ல. இரு தரப்பினரும் எனக்கு நெருங்கியவர்கள் என்பதால் உண்மையை மறைத்து அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது ஓட்டலில் மேற்கண்ட நபர்கள் ஜாதியை சொல்லி பேசியதாக எனக்கு தெரியவில்லை. முருகனின் மனைவி கடைக்கு வரவில்லை. போலீஸ் விசாரணையில் உண்மைக்கு மாறாக கண்மணி என்ற முனியம்மாள் புகார் கொடுத்ததாக நான் சொல்லி இருக்கிறேன்.**

R KANAGARAJ

Digitally signed by R KANAGARAJ
Date: 2024.11.04 16:00:22 +0530